# காவிரிப்பிரச்சினை: முத்தமிழறிஞர் கலைஞர்- கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின்

# எடுத்துக் கொண்ட முயற்சிகளும் - சட்டப் போராட்டங்களும்! வெற்றி வரலாறும்!

**நேற்றைய தொடர்ச்சி**


மாநிலஅரசுக்கு தங்களது கண்டனத்தை தெரிவிக்கின்ற வகையில் கழகத்தலைவரும் மற்றும் சட்டமன்ற உறுப்பிர்களும் கருப்புச் சட்டை அணிந்து சட்டமன்றத்திற்கு சென்றனர். கழகத்தலைவர் முயற்சியால் 15.03.2018 மாலை 3.00 மணிக்கு மீண்டும் பேரவை கூடியது. கழகத்தலைவர் தனது உரையில் மார்ச் 9 ஆம் தேதிக்கு முன்பே பேரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றிருக்க வேண்டும். காவிரி பிரச்சினையில் அனைத்துக்கட்சியும் சிந்தனையாலும், செயலாலும் ஒன்றுபட்டு இருக்கின்றது இந்த ஒற்றுமையை இந்தஅரசு முழுஅளவில் பயன்படுத்தி இருக்க வேண்டும் காவிரி மேலாண்மை வாரியம் முறைபடுத்தும் குழுவை அமைக்க உச்சநீதிமன்ற காலக்கெடு நிர்ணயித்த நிலையில் காலதாமதமாக செய்வது மிகுந்த கண்டனத்திற்கு உரியது என்றும் தீர்மானம் மூலம் தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வும், ஒற்றுமையும் ஒன்றிய அரசிற்கு உணர்த்தப்படுகிறது. இத்தீர்மானத்தை ஒன்றிய அரசு அவமதித்தால் தமிழக மக்களின் ஒட்டுமொத்த கோபத்தை மத்தியஅரசு எதிர்கொள்ள வேண்டிவரும் எனத்தெரிவித்து இத்தீர்மானத்திற்கு தி.மு.க. முழுமனதோடு ஆதரவு அளிப்பதோடு காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்காவிட்டால் தமிழகஅரசு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இராஜினாமா செய்யவேண்டும் என்றும், தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இராஜினாமா செய்யத் தயாராக இருக்கின்றோம் என்று அவையில் ஆற்றிய உரை உணர்வுப்பூர்வமானது, நேர்த்தியானது. அரசியலில் அவரின் முதிர்ச்சியை வெளிப்படுத்துகின்ற உரை என்பது தமிழக மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டதாக அமைந்திருக்கின்றது.

டெல்லியில் நடைபெற்ற தென்மாநில அதிகாரிகள் கூட்டத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பான காவிரி மேலாண்மை வாரியம்

அமைப்பதற்கு பதிலாக திட்டம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு உச்சநீதிமன்ற தீர்ப்பினை நீர்த்துப்போக செய்கின்ற முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுப்பட்டு இருக்கின்றது என்பது மிக தெளிவாக தெரிகின்றது. உண்மையில் உச்ச உச்ச நீதிமன்ற தீர்ப்பின் நோக்கம் காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல் என்பதனுடைய பொருள் என்னவென்றால் காவிரி மேலாண்மை வாரியப் பொறுப்பில் கபினி, ஹேமாவதி, ஹேரங்கி, யாக்காட்சி, சொர்ணநதி, கிருஷ்ணராஜ சாகர், லோயர், பவானி, அமரவதி, மேட்டூர், பனாசுராசாகர் இவ்வணைகள் அனைத்தும் இதன் கட்டுப்பாட்டில் வந்துவிடும்.

காவிரியில் சரியாக தண்ணீர் திறந்து விடப்படுகிறதா என்பதனை ஒன்றிய நதிநீர் ஆணையம் உதவியுடன் காவிரி ஒழுங்காற்றுக்குழு கண்காணிக்கவேண்டும். தண்ணீர் திறந்துவிடுவதில் நீர்ஆதார மாநிலமான கர்நாடகம் தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்க முடியாது

காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்காற்றுக்குழு ஆறு வாரத்திற்குள்





ஒன்றிய அரசு அமைக்கப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் அத்தீர்ப்பில் குறிப்பிட்டது போல் ஒன்றிய அரசு இதை கடைப்பிடிக்க வேண்டும். இதுதான் இந்த தீர்ப்பின் ஒரு பகுதி.

ஸ்கீம் என்ற வார்த்தையை பயன்படுத்தி ஒன்றிய அரசு திட்டமிட்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் காலதாமதப்படுத்தி காவிரி டெல்டா பகுதிகளை பாலைவனமாக்கவும் ஹைட்ரோகார்பன் திட்டம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் திட்டத்தை கொண்டு வந்து நிலத்தடி நீரை உறிஞ்சி அப்பகுதியை சுடுகாடு ஆக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையை தமிழகத்தின் அன்றைய முதல்வர் ஒன்றிய அரசுக்கு கடுமையான கண்டனம் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தது கண்டிக்கத்தக்கது.

ஒன்றிய அரசு என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்பதனை(Union of States) மோடிஅரசு முற்றிலுமாக மறந்து சர்வாதிகாரமாக நடப்பது உயர்ந்த பதவியில் இருப்பதற்கு அழகல்ல. மாநிலம் என்பது கூட்டாட்சிக்கான அனைத்து அரசமைப்பு சட்டத்தை கொண்டுள்ளது. 13 நீதிபதிகளை கொண்ட உச்சநீதிமன்றஅமர்வு 1973ம் ஆண்டின் கேசவானந்தபாரதி வழக்கில் வழங்கிய தீர்ப்பில் கூட்டாட்சி தத்துவம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை கூறுகளில்ஒன்று என்று தெளிவுபடுத்தியுள்ளது. அதன் அடிப்படையில்தான் மாநில அரசுகளுக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தால் சட்டத்தை உருவாக்க முடியும் உச்சநீதிமன்றம் மட்டும் அச்சட்டத்தை அமுல்படுத்துவதற்குண்டான அதிகார அமைப்பாகும். எனவே, நீதிமன்ற உத்திரவுகளை நாடாளுமன்றம் விசாரிக்கும் எனும் வாதம் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு முரணானது. காவிரி நடுவர்மன்றம் என்பது உச்சநீதிமன்றத்திற்கு இணையான அதிகாரத்துடன் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தி பெரும்பான்மை அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஒட்டி உச்சநீதிமன்றத்தில் அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பை காலதாமதமாக்கவோ, தடை விதிக்கவோ, மறு விசாரணை நடத்தவோ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.

உச்சநீதிமன்ற தீர்ப்பு அனைவரையும், எல்லா மாநிலங்களையும் கட்டுப்படுத்தக் கூடியது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை, உச்சநீதிமன்றம் அரசியல் அமைப்பு சட்டத்தால் தேவையான அதிகாரங்களுடன் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு.

இதன் முடிவுகளும், தீர்ப்புகளும் தனியாரையும், நிறுவனங்களையும், மாநில அரசுகளையும், மத்திய அரசுகளையும் கட்டுப்படுத்தக் கூடியது. அரசியல் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதாகவே ஒன்றிய, மாநில அரசின் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துள்ளனர். அப்படியிருக்கும்பொழுது உச்சநீதிமன்ற தீர்ப்புகளை நிறைவேற்றாமலும் காலதாமதம் செய்வதும், ஊதாசினப்படுத்துவதும் அவற்றிற்கு எதிராக பேசுவதும் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு முரணானது. ஆறு வாரத்திற்குள் உச்சநீதிமன்ற தீர்ப்பான காவிரி மேலாண்மை வாரியத்தை ஒன்றிய அரசு அமல்படுத்தாவிட்டால், ஒன்றியஅரசு மக்கள் மத்தியில் நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை குறைந்து விடும்.

இந்த சூழ்நிலையில் த.வெ.க.அரசு அமைந்தவுடன் கர்நாடகா முதலமைச்சர் சிவக்குமார் அவர்கள் காவிரியின் குறுக்கே மேக்கேதாட் என்னும் இடத்தில் மேகதாது அணையை கட்டுவதற்கு உண்டான விரிவான திட்டறிக்கை தயார் செய்யப்பட்டு விட்டதாக கூறுகிறார்.

இந்த சூழ்நிலையில் கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உடனடியாக காவிரியின் குறுக்கே அணை கட்டக்கூடாது என்று த.வெ.க அரசை வலியுறுத்தியதால், த.வெ.க. அரசு அவையில் காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டக்கூடாது என அரசினர் தனித்தீர்மானம் கொண்டு வந்தது.


அத்தீர்மானம் குறித்து எதிர்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது உரையில் சர்வகட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு, கருத்துக்கள் கேட்கப்பட்டு, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றிடவும், அனைத்துக் கட்சித்தலைவர்கள் பிரதமர் மோடியை சந்தித்து அழுத்தம் தருவதற்கு முதல்வர் ஏற்பாடு செய்திடவும். மேகதாது அணை கட்டுவதை நிறுத்திடவும், நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்பதை சிறப்புத்தீர்மானத்தில் சேர்த்திடவும். இத்தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கையை ஏற்று நடுவர்மன்றம் அமைக்கும் திருத்தம் சேர்க்கப்பட்டது.

இச்சூழ்நிலையில் தமிழக அமைச்சர் நிர்மல்குமார் த.வெ.கஅரசிற்கு ஆதரவு தரும் கட்சிகளும். தி.மு.க. போன்ற எதிர்க்கட்சிகளும் கர்நாடகா அரசிற்கு ஆதரவாக செயல்படுகிறது என்றும், அனைத்துக் கட்சி கூட்டம் தேவையில்லை என பேசியிருப்பது சிறுபிள்ளைதனமானது. கண்டனத்திற்குரியது.

இதற்கு சில அரசியல் கட்சித்தலைவர்கள் நடுவர் மன்றம் தேவையில்லை என்று கருத்து தெரிவிக்கின்றனர்.

1. ஏற்கனவே அமைத்த நடுவர் மன்றம் எத்தனை வருடத்திற்கு எவ்வளவு TMC தண்ணீர் கர்நாடகா தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டது.

2. இப்பொழுது நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்பது காவிரியின் குறுக்கே அணை கட்டக்கூடாது என்பதற்காக காலம் மற்றும் சூழ்நிலையைக்கருத்தில் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் அவையில் பேசியிருப்பது காவிரி டெல்டா விவசாயிகளின் மத்தியில் வரவேற்பையும் மகழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.



**கம்பம் நா. ராமகிருஷ்ணன்**
கம்பம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்

கர்நாடகா முதல்வர் துரிதமாக அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்டுகிறார். இதில் சர்வகட்சி தலைவர்கள் சித்தராமையா எடியூரப்பா, ஒன்றிய அமைச்சர் குமாரசாமி இன்னும் பல கட்சித்தலைவர்கள் கலந்து கொண்டு தங்களின் ஒன்றுமையின் அடையாளமாக காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டியே தீருவோம் என்றும், கர்நாடகாவிலுள்ள அணைகளில் 40 TMC தண்ணீர் சேமித்து வைப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 03.08.2026ல் தஞ்சையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் பேசியது

1. காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டக்கூடாது என்றும்.

2. திராவிட மாடல் அரசு 2021-2025 காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் ஜீன் 12ல் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

3. மே,ஜீன் மாதங்களில் நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை பெற பிரதமர் மோடியை வலியுறுத்த வேண்டும் என்றும்,

4. விவசாயிகளின் பயிர்க்கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும்

5. குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 25000 தரப்படவேண்டும் என்றும்.

சாகுபடிக்கு உரம், பூச்சிமருந்து மற்றும் விவசாயப்பணிகளுக்கான செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும்,

7. பயிர் காப்பீட்டு பிரிமியத் தொகையை அரசே வழங்கவேண்டும் என்று பேசியது நிதர்சனமான உண்மை.

ஆனால் இவ்விசயத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அவர்களின் இயலாமை, முயற்சியின்மை, புரிதல்தன்மை இல்லாத தன் விளைவு இப்பிரச்சினையின் வீரியத்தை குறைக்கின்ற வகையில் திசை திருப்பி, எதிர்க்கட்சித் தலைவரை கைது செய்து உயர்நீதிமன்றத்திற்கு அறிவிப்புக்கு மாறாக 10 மணிநேர அலைக்கழிப்பு செய்து, தஞ்சையில் போலீஸ் விசாரணை நடத்தியது விஜய் அரசு மீது டெல்டா விவசாயிகள் கடும் கோபத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் மேகதாது அணை குறித்து வெளிப்படையான கருத்துக்களை தெரிவிக்காத நிலையில் தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலோடு, மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்கள் 2018இல் உச்சநீதிமன்ற தீர்ப்பினை நிறைவேற்றிட வேண்டும் என்றும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் 15 நாட்களுக்கு விநாடிக்கு 3500 கண அடி தண்ணீர் திறந்துவிட வேண்டும் எனவும், மேலும் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 9.46 TMC தண்ணீர் ஈடுசெய்யும் வகையில் 7000 க்யூசெஸ் தண்ணீரை பிலிகுண்டுவிலிருந்து தமிழகத்திற்கு விடுவிக்க கர்நாடகா அரசிற்கு உத்தரவிட வேண்டும் என தி.மு.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது. விரைவில் இம்மனு விசாரணைக்கு வரவுள்ளது.

இன்றைக்குள்ள மோடி அரசு மாநில சுயாட்சியை சம்மட்டி கொண்டு அடித்து சுக்குநூறாக ஆக்குவது ஒரே மொழி, ஒற்றைக் கலாச்சாரம், ஒரே மதம், ஒரே கடவுள், என்று நாட்டின் பன்முகத் தன்மையை சீர்குலைப்பது தனது ஆட்சி இல்லாத மாநிலத்தை முடக்குவது, வெறுப்பு அரசியல், பிரித்தாலும் சூழ்ச்சி பெரும்பான்மை வாதம், அதிகார குவிப்பு, வளர்ச்சி முடக்கம், இந்தி, சமஸ்கிருதம் திணிப்பு என்று நாடு எதிர்கொள்ளும் பல அபாயங்களுக்கு மாற்றுதான் மாநில சுயாட்சி அது தேசிய முழக்கமாக உணரும் போதுதான் இந்நாடு கூட்டாட்சி அடையும். மாநிலங்களின் உரிமை என்பது இந்நாட்டின் பன்மைதத்துவத்தோடு சம்பந்தப்பட்டது. மொழி உரிமை என்பது மாநிலங்களின் அடையாளம் என்பதனை மோடி அரசு புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். மாநில உரிமைகளை பேணி பாதுகாக்க தலைவர் "முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓர் அணியில் திரண்டு நமது உரிமைகளை காத்திட ஒன்றுபடுவோம். போராடுவோம்."

---

வேலூர் மாவட்டத்தில்

## கூட்டுறவு நிறுவனங்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

### மக்களவையில் - டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக.14-

வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் (PACS), நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு சந்தைப்படுத்தும் சங்கங்கள், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகள், அவற்றை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா எழுத்து பூர்வமாக அளித்த பதில் கீழ்வருமாறு:

நாடு முழுவதும் கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க பல அடுக்கு நிறுவன அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒன்றிய அளவில் உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் தலைமையில் இடையிலான குழு (IMC), கூட்டுறவுத் துறை செயலாளர் தலைமையில் தேசிய அளவிலான ஒருங்கிணைப்புக் குழு (NLCC), மாநில தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில கூட்டுறவு மேம்பாட்டுக் குழு (SCDC), மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட கூட்டுறவு மேம்பாட்டுக் குழு (DCDC) ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இதுவரை இரண்டு மாநில கூட்டுறவு மேம்பாட்டுக் குழு கூட்டங்களும், இரண்டு மாவட்ட கூட்டுறவு மேம்பாட்டுக் குழு கூட்டங்களும் நடைபெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார்.



PACS அமைப்புகளை கணினிமயமாக்கும் ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 4,561 PACS களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, ரூ.55.73 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 64 PACSகளும் அடங்கும். இதன் மூலம் வெளிப்படைத்தன்மை, கணக்கியல், தணிக்கை, கண்காணிப்பு, டிஜிட்டல் சேவை வழங்கல் மற்றும் கூட்டுறவு வங்கி கட்டமைப்புடன் ஒருங்கிணைப்பு ஆகியவை மேம்படுத்தப்படும் என ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

வேலூர் மாவட்டத்தில் 55 PACSகள் பொது சேவை மையங்கள் மற்றும் நியாய விலைக் கடைகளாகவும், 43 PACSகள் மைக்ரோATM வசதியுடனும், 55 PACSகள் PM கிசான் சம்ரிதி கேந்திராக்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், 28 PACSகள் வேளாண் இயந்திர சேவைகளையும், 9 PACSகள் மருந்தகம்/மருத்துவக் கடைகளையும் நடத்தி வருகின்றன. ஒரு PACS கூட்டுறவு மருத்துவக் கடையை நடத்தி வருவதுடன், 43 PACSகளில் கிடங்குகள் உள்ளதாக ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு நிறுவனங்களின் தொழில்முறை நிர்வாகம் மற்றும் நீண்டகால நிலைத்தன்மையை மேம்படுத்த, தேசிய கூட்டுறவு பயிற்சி கவுன்சில் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 1,31,499 பேர் கூட்டுறவு நிர்வாகம், நிதி மேலாண்மை, டிஜிட்டல் கல்வியறிவு, கணினிமயமாக்கல் மற்றும் தொழில் பன்முகப்படுத்தல் உள்ளிட்ட துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். இதில் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 2,688 பேரும் அடங்குவர்.

மேலும், தமிழ்நாட்டில் 4,097 PACS செயலாளர்களுக்கு பொது சேவை மைய சேவைகளை திறம்பட பயன்படுத்துவது குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 560 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் 72,885 கூட்டுறவு உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். இதில் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 2,234 உறுப்பினர்களும் அடங்குவர்.

ஒன்றிய அரசின் தகவலின்படி, 15.07.2026 நிலவரப்படி வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 345 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இதில் 314 சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன.

அவற்றில் 55 தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் (PACS/LAMPS/FSS), 171 பால் கூட்டுறவு சங்கங்கள், 36 கைத்தறி மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 32 கடன் மற்றும் சிக்கன கூட்டுறவு சங்கங்கள், 15 வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள், 7 நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், 5 மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 3 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்டவை அடங்கும்.

மேலும், வேளாண்மை, பால் உற்பத்தி, மீன்வளம், கைத்தறி, சந்தைப்படுத்துதல், பதப்படுத்துதல், சேமிப்பு உள்ளிட்ட துறைகளில் தகுதியுடைய கூட்டுறவு திட்டங்களுக்கு தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC) மூலம் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுவதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

---

மறைந்த செங்கல்பட்டு நகர முன்னாள் செயலாளர்

## என்.ராதாகிருஷ்ணன் உடலுக்கு அஞ்சலி!

**முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - க.சுந்தர் - இ.கருணாநிதி – எஸ்.ஆர்.ராஜா நேரில் செலுத்தினர்!**

காஞ்சிபுரம், ஆக.14-

மறைந்த செங்கல்பட்டு நகர கழக முன்னாள் செயலாளர் என். ராதாகிருஷ்ணன் உடலுக்கு முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேரில் வந்து மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். க.சுந்தர் - இ.கருணாநிதி - எஸ்.ஆர்.ராஜா உள்ளிட்ட கழகத்தினரும் மலர் மாலை வைத்து மரியாதை செய்தனர்.

செங்கல்பட்டு நகரக் கழகச் செயலாளராக சிறப்பான முறையில் பணியாற்றியவர் என்.இராதாகிருஷ்ணன் (வயது 84). வயது மூப்பின் காரணமாக அவர் 11ஆம் தேதியன்று இயற்கை எய்தினார்.

அன்னார் மறைவு செய்தி அறிந்து துயருற்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்ததும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் வந்து மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி – தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, க.அன்புச்செல்வன், செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், மறைமலைநகர் வடக்கு நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் எம்.கே.டி. கார்த்திக், திருக்க முக்குன்றம் பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ், செங்கல்பட்டு நகரமன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், செங்கை நகர கழக நிர்வாகி கள் முனுசாமி, ஆனந்தன், கிருஷ்ண மூர்த்தி, திருவள்ளு வன், இராஜி, சந்தோஷ்கண்ணன், ரமேஷ், மாலிக் உசேன், ஜாகீர் உசேன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

நேற்று முன்தினம் மாலை அன்னாரது உடல் செங்கல்பட்டு வேளச்சேரி நகரில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சென்று செங்கல்பட்டு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.